# அரசாங்க நிறுவகங்களின் தேவைகளுக்கு, டிஜிட்டல் கையொழுத்துக்களை சான்றளிப்பதற்கான நிலையான செயற்பாட்டு நடைமுறை **Standard Operating Procedure (SoP)**

அனைத்து அரச நிறுவகங்களிலும் டிஜிட்டல் கையெழுத்து பயன்படுத்தப்படுவதை ஏற்றுக்கொள்வதற்காக அதுதொடர்பில் அதற்கான அங்கீகரிக்கப்பட்ட "சான்றிதழ் சேவை வழங்குநரிடமிருந்து 'Certificate Service Provider (CSP) ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள வேண்டும். அதற்காக தற்பொழுது இலங்கை மத்திய வங்கி மற்றும் மேலும் சில வங்கிகள் உரிமையுடன் அதிகாரத்தைக் கொண்ட ஒரே நிறுவனமாக LankaClear (Pvt) Ltd (LCPL) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் கீழ்கண்ட தேவைகளை பூர்த்தி செய்வதன் மூலம் அரசாங்க நிறுவகத்திற்கான டிஜிட்டல் கையொழுத்து சேவையை LankaClear (Pvt) Ltd (LCPL) மூலம் பெற்றுக் கொள்ள முடியும்.

LankaClear இனால் வெளியிடப்பட்டுள்ள டிஜிட்டல் கையெழுத்து 2006 ஆம் ஆண்டு இலக்கம் 18 இன் கீழான மின்னணு பரிவர்த்தனை , சட்டத்திற்கு அமைவாக சட்ட ரீதியில் செல்லுபடியானதாகும். அதே போன்று அரச நிறுவகங்களின் செயல்பாடுகளுக்காக டிஜிட்டல் கையெழுத்தை வழங்கும் பொறுப்பும் LankaClear யிடம் வழங்கப்பட்டுள்ளது என்பது அரசாங்க நிறுவனங்களில் டிஜிட்டல் கையொப்பங்களை நடைமுறைப்படுத்துவதற்கான ஜனாதிபதி செயலகத்தின் . 23-09-2021 திகதியிடப்பட்ட CTF/01/2021 சுற்றறிக்கை மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைவாக அரச நிறுவகம் தமது நிறுவகத்திற்காக டிஜிட்டல் கையெழுத்தை நடைமுறைப்படுத்துவதற்கு கீழ்கண்ட வழிமுறைகளை கடைபிடிப்பது அவசியமாகும்.

1. அரச நிறுவகங்கள் LankaClear ஊடாக டிஜிட்டல் கையெழுத்து சேவையை பெற்றுக்கொள்வதற்கு பின்வரும் படிகளைப் பின்பற்றுவது அவசியம்.

A. சம்பந்தப்பட்ட நிபந்தனை மற்றும் விதிகளுக்கு உடன்படுவதாக உறுதி செய்து நிறுவனத்தின் கடிதலைப்பு கடிதத்தில் அங்கீகாரம் கொண்ட அதிகாரியின் கையெழுத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்.

B. நிறுவகம் ஸ்தாபிக்கப்பட்டமைக்கான பாராளுமன்ற சட்டத்தின் பிரதி மற்றும் அதற்கான அமைச்சரவை தீர்மானம் முதலானவை சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

C விதிக்கப்பட்டுள்ள விதி முறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைவாக செயல்படுவதற்கு அதிகாரம் வழங்கப்படும் Lanka Clear இனால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள படிவத்தை பூரணப்படுத்தி சமர்ப்பித்தல்

D. நிறுவனத்திற்குள் டிஜிட்டல் கையெழுத்தை பயன்படுத்துவதற்கு அதிகாரமிக்க அனைத்து அதிகாரிகளும் உரிய வகையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதுடன் , அதனை நிறுவனத்தினால் அதிகாரம் கொண்ட அதிகாரி ஒருவரினால் உறுதிப்படுத்த வேண்டும்.

E அந்தந்த விண்ணப்பத்தாரரின் தேசிய அடையாள அட்டை (NIC) / கடவுச்சீட்டு அல்லது வாகன சாரதி அனுமதிப்பத்திரத்தின் பிரதி சட்டத்தரணி ஒருவரினால் உறுதிசெய்யப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

F. மேலே குறிப்பிடப்பட்ட அனைத்து ஆவணங்களும் ஸ்கேன் செய்யப்பட்டு அதன் பிரதிகள் helpdesk@lankaclear.com என்ற **மின்னஞ்சலுக்கு** அனுப்பப்பட வேண்டும்.

G .Lanka Clear இனால் அனைத்து ஆவணங்களும் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் விண்ணப்பிக்கப்பட்ட நிறுவகத்தினால் கட்டணத்தொகை செலுத்தப்பட வேண்டும். அதற்கு ஒரே முறையில் தொகையை செலுத்துதல் மற்றும் வருடாந்த சான்றிதழ் கட்டணம் முதலானவை உள்ளடங்கும். அரசாங்க நிறுவகத்தினால் மேற்கண்ட தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் LankaClear டிஜிட்டல் சேவை கையெழுத்து சேவை இயலச்செய்யப்படுவதுடன் பயனர்களுக்கு பாதுகாப்பான டோக்கன்கள் வழங்கப்படும்

(டிஜிட்டல் சிக்னேஜர் சேவையைப் பெற்றுக் கொள்வதற்காக உங்களுக்கு LankaClear இணையதளத்தை அணுக முடியும். (https://www.lankaclear.com/knowledge-center/lankasign/ )

H. டிஜிட்டல் கையெழுத்து சேவைக்காக பங்களிப்பு செய்யும் அரச நிறுவகம் கீழ் கண்ட தேவைகளை முழுமையாக உறுதிப்படுத்திருக்க வேண்டும்.

- டிஜிட்டலாக கைச்சாத்திடப்பட்ட ஆவணத்தை களஞ்சியப்படுத்துவதற்கு பயனாளிகளின் மடிக்கனிணி மற்றும் கனிணிகளை பகிர்ந்துகொண்ட போல்டர் அல்லது போல்டர்களின் களஞ்சியக் கொள்வனவு.
- Cloud அல்லது தனிநபர் கனிணி களஞ்சிய வசதி
- டிஜிட்டல் கையெழுத்து செல்லுபடியாவதற்கு இணையதள தொடர்பு

I. டிஜிட்டலாக கைச்சாத்திடப்பட்ட ஆவணங்களின் அச்சுப்பிரதி செல்லுபடியற்றது என்பதினால் டிஜிட்டலாக கைச்சாத்திடப்பட்ட அனைத்து ஆவணங்களும் மேல் கண்ட 2 இற்கு அமைவாக டிஜிட்டலாக கைச்சாதிடப்பட்ட ஆவணத்தை எப்பொழுதும் பொறுப்பாக களஞ்சியப்படுத்துவதை உறுதி செய்துக்கொள்ள வேண்டும்.

J. பாதுகாப்பு நடவடிக்கை கடட்மைப்பை அனுமதியை பரிசோதிப்பதற்கு உங்களால் LankaClear இணையதளத்தில் பிரவேசிக்க முடியும். https://www.lankaclear.com/assets/images/knowledge-center/lankasign/Security-Tokens-OS-Compatibility.pdf

K. எப்பெழுதும் ஆவணமொன்றை டிஜிட்டலாக கைச்சாதிடுவதற்கு தனிப்பட்ட கனிணி அல்லது மடிக்கனிணியின் adobe reader மென்பொருளை ஸ்தாபித்திருப்பது அவசியமாகும்.

L. ஆவணங்களை டிஜிட்டலாக கைச்சாதிடுவதை தொடர்ச்சியாக முன்னெடுப்பதற்கு காலாவதியாவதற்கு முன்னர் மென்பொருள் சேவையின் பங்களிப்பை புதுப்பிப்பது அவசியமாகும்.

M. டிஜிட்டல் கையெழுத்தின் செல்லுபடியான காலம் அல்லது தவணைக் கட்டண காலம் காலாவதியான பின்னரும் டிஜிட்டல் கையெழுத்து ஆவணம் செல்லுபடியானதாகும்.